அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

**முருகன், பேரறிவாளன், சாந்தன் மற்றும் நளினி உள்ளிட்ட 7 பேரையும் மத்திய அரசு விடுதலை செய்ய வேண்டும்.**

**சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ.அறிக்கை**

-------

அ.எண் 48 /2016

தேதி: 03.03.2016.

முன்னாள் பிரதமர் ராஜுவ் காந்தி கொலை வழக்கில் 24 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்துவரும் முருகன், பேரறிவாளன், சாந்தன் மற்றும் நளினி உள்ளிட்ட 7 பேரை மன்னித்து விடுதலை செய்யக் கோரி தமிழ்நாடு தலைமைச் செயலாளர் மத்திய அரசின் உள்துறை செயலாளருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

2014 பிப்ரவரி 18 ஆம் தேதி உச்சநீதி மன்றம் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்ட மறுநாளே, தமிழக சட்டப் பேரவையில், ‘இம்மூவரையும் யார் குறுக்கே நின்றாலும் தமிழக அரசு விடுதலை செய்யும்’ என்ற அறிவிப்பை முதலமைச்சர் வெளியிட்டார். இதற்கான ஒப்புதலை 3 தினங்களுக்குள் மத்திய அரசு தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவித்தார். ஆனால், மத்திய அரசு தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்ததை அடுத்து உச்சநீதி மன்றம் தமிழக அரசின் அறிவிப்பிற்கு தடை விதித்தது.

மேலும், டிசம்பர் 2, 2015 அன்று உச்சநீதி மன்றம் சிபிஐ தொடர்பான வழக்குகளில் மத்திய அரசு மட்டுமே இவர்களின் விடுதலை குறித்த முடிவு எடுக்க முடியும் என்று தெரிவித்தது.

பிப்ரவரி 2014 உச்சநீதி மன்ற அறிவிப்பிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தும், இறுதியாக டிசம்பர் 2015இல் உச்சநீதி மன்றம் கருத்து தெரிவித்து 3 மாதங்கள் கழிந்தும் நிதானமாக தமிழக தலைமைச் செயலாளர் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பது சமீபத்தில் நடைபெற இருக்கும் தேர்தலை கருத்தில் கொண்டு ஆளுங்கட்சி செய்யும் அரசியல் என்ற ஐயம் எழுகிறது.

மேற்சொன்னவர்களின் விடுதலை வெறும் அரசியல் கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கப்பட்டு வருகிறது. மத்தியில் காங்கிரஸ் கட்சியின் கூட்டணி மந்திரி

சபையில் அங்கம் வகித்த தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த 10 ஆண்டுகளில், இவர்களது விடுதலைக்காக எந்தவித குரலும் கொடுக்காமல், எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் காத்து, தற்சமயம் இவர்களது விடுதலையைப் பற்றி பேசுவதும் தேர்தல் அரசியல்தான் என்பதிலும் சந்தேகமில்லை.

பொதுவாக, ஆயுள் தண்டனைக் கைதிகள் நன்னடத்தையின் அடிப்படையில் 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பிறகு விடுதலை செய்யப்படுவது என்பது மரபு. அனைத்து மாநிலங்களும் இந்த மரபைப் பின்பற்றி வருகின்றன.

ராஜுவ் காந்தி கொலை வழக்கில் 24 ஆண்டுகாலம் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சாந்தன், முருகன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும், இந்த மரபின் அடிப்படையிலும், சிறைவாசம் அனுபவித்த 24 ஆண்டுகள் என்ற கணக்கின் அடிப்படையிலும், எல்லாவற்றுக்கும் மேலாக மனிதாபிமானம் என்ற அடிப்படையிலும் அவர்களை விடுதலை செய்வது குறித்து மத்திய அரசு உடனடியாகப் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

இவர்களது விடுதலை என்பது மத்திய அரசின் கையில்தான் உள்ளது. மத்திய அரசு மனது வைத்தால் மட்டுமே சாத்தியம் என்ற வகையில் இருப்பதால், உடனடியாக இந்த 7 பேர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கோரிக்கை வைக்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



**ஆர்.சரத்குமார்,** எம்.எல்.ஏ.,
**தலைவர்.**